11 பாடம்

# எனக்காக ஒரு பரிசா?

**தங்களுக்குப் புதிதாக ஒரு தம்பிப் பாப்பா பிறந்திருந்தது. சிமிர்னாவுக்கும் அவளது தங்கைகளுக்கும் மிகவும் சந்தோஷமாயிருந்தது. தங்கள் குட்டித்தம்பி யுரியேலுக்காக அநேக பரிசுப்பொருட்களை வாங்கினார்கள். இன்றைக்கும்கூட புதிதாகப் பிறந்த ஒரு குட்டித்தம்பியைப்பற்றிப் பார்க்கப்போம்.**

மரியாளுக்குத் தனது சந்தோஷத்தை அடக்கமுடியவில்லை. 'தேவாதி தேவனாம் தேவகுமாரனே தனது மகனாகப் பிறக்கப்போகிறார்' என்பதை எண்ணிஎண்ணிப் பேரானந்தம் கொண்டாள்.

தேவதூதன் தன்னிடம் இயேசுவைப்பற்றிய நற்செய்தியைச் சொல்லிய பிறகும்கூட மரியாளால் அந்த இன்ப அதிர்ச்சியிலிருந்து வெளியே வரமுடியவில்லை.

ஆனாலும், 'தான் தேவகுமாரனின் தாயாக இருக்கும்படிக்கு தேவன் தன்னை தேர்வு செய்தார்' என்பதைப் பற்றியே மரியாள் யோசித்துக்கொண்டிருந்தார்.

யோசேப்பும் மரியாளும் தாவீதின் குடும்பத்திலிருந்து வந்தவர்கள்தாம். தேவகுமாரனாம் இயேசு தாவீதின் சந்ததி எனப்படுவார் என்று தான் வேதமும் சொல்கிறது.

ஆனால், யோசேப்பும் மரியாளும் வாழ்ந்த ஊர்தான் வேறாக இருந்தது. ஏனெனில் மீகா தீர்க்கதரிசி, 'இயேசு பெத்லகேமில் பிறப்பார்' எனச் சொல்லியிருந்தார்.

வேதத்திலே மீகா என்னும் தீர்க்கதரிசி, "பெத்லகேமே, நீ யூதாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும் இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்படுவார்" என்று மிகவும் அருமையாக, தெளிவாக இயேசுவின் பிறப்பைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்.

மீகா 5:2 இல் இவ்வாறு இயேசுவின் பிறப்பைக்



## மனன வசனம்

**நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது. யாக்கோபு 1:17.**

குறித்துத் தீர்க்கதரிசனமாக மீகா சொல்லியிருப்பதை நாம் காணமுடியும்.

இந்த வார்த்தை உண்மை யாகும்படி யோசேப்பும் மரியா ளும் பெத்லகேமில் இருக்க வேண்டும். ஆனால் நாசரேத் எனும் ஊரில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் அகஸ்துராயனிட மிருந்து ஒரு செய்தி வெகு வேக மாக தேசம் முழுவதற்கும் பரவியது. எத்தனை மக்கள் தமது ராஜ்யத்தில் வாழ் கிறார்கள் என்று அறிந்து கொள்ள ஆசைப்பட்டான்.

அதாவது, அகஸ்து ராயனால், உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண் டும் என்ற கட்டளை பிறந்தது. எனவே, வெவ்வேறு ஊர்களில் வசித்தவர் களும் அகஸ்து ராயனின் கட்டளைப்படியே குடிமதிப்பு எழுதப்படும் படிக்குத் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போனார்கள்.

ஆதலால் தாவீதின் வம்சத் தானான யோசேப்பு தங்களது குடிமதிப்பு எழுதப்படும்படிக்கு மரியாளுடனே பெத்லகேமுக் குப் போனார்.

மரியாளுக்குப் பேறுகாலம் நெருங்கிக்கொண்டிருந்தது. எப்போது வேண்டுமானாலும் குழந்தை பிறக்கக்கூடிய ஒரு நிலை காணப்பட்டது.

இத்தகைய நேரத்தில் மரியாளுக்குக் குழந்தை பிறந்துவிட்டது. ஆம், இயேசு மகாராஜா பிறந்துவிட்டார்.

ஆம், இயேசு பிறந்த போது, சத்தரத்திலே அவர் களுக்கு இடமில்லாமல் மாட்டுத் தொழுவம்தான் கிடைத்தது. எனவே இயேசுவைத் துணிகளில் சுற்றி, முன்னணை யிலே கிடத்தினார்கள்.



## செய்தி

**தேவன் நல்ல பரிசுகளையே தருவார்.**

**தேவன் நமக்குத் தந்த சிறந்த பரிசு இயேசு.**

தேவனுடைய திட்டமோ, தேவனின் வார்த்தைகளோ ஒரு போதும் தவறுவதில்லை. மீகா தீர்க்கதரிசியின்மூலம் தேவன் சொல்லியபடியே இயேசு பெத்லகேமில் பிறக்கும்படியாயிற்று. எல்லாவற்றுக்கும் மேலாக மரியாளுக்கும் யோசேப்புக்கும் ஓர் அருமையான பரிசாக தேவன் இயேசுவைக் கொடுத்தார்.

என் அன்பே! இந்த வானம், பூமி, அழகிய மலைச் சிகரங்கள், மணமிக்க மலர்ச் சோலைகள், நம் வாழ்விற்குத் தேவையான யாவையும் தேவன் நமக்குத் தந்திருந்தாலும், இரட்சிப்பைத் தரும்படி இயேசுவைத் தரவில்லையெனில் யாவும் வீணே.

தேவன் நமக்குத் தந்துள்ள பரிசுகளில் எல்லாம் மிகச்சிறந்த பரிசு எது தெரியுமா? அது ஒரு நபர். அவர் இயேசுவே.

## புதிர் 11

***செய்முறை:*** *நமக்கு நன்மையான காரியங்கள் யாவும் எங்கேயிருந்து கிடைக்கின்றன? இதைக் கண்டுபிடிக்க இங்கே கொடுக்கப்பட்டுள்ள குறிகளையும் எழுத்துகளையும் சரியாகப் பொருத்தி, பதிலைக் கோட்டில் எழுதவும்.*

_ _ _ _ _ _ _    _ _ _    _ _ _

★ ⇔ ↷ ⇊ ⇍ ↶ ⇖    ↲ ⇅ ↻    ↴ ⇒ ⇉

_ _ _ _ _ _    _ _ _    _ _ _ _

⇈ ⇎ ↺ ⇊ ↶ ⇖    ↲ ⇅ ↻    ⇐ ⇎ ⇌ ⇉

_ _ _ _ _ _ _ _ _    _ _ _ _ _

⇇ ↻ ↶ ⇑ ↹ ⇋ ⇏ ⇅ ⇄    ⇐ ⇏ ↸ ⇓ ⇄

| ஈ | எ | ா | ை | கி | ட | ண | த | து | ந் | ந | பி | பூ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ↴ | ↲ | ↶ | ↷ | ↸ | ↹ | ↺ | ↻ | ⇄ | ⇅ | ★ | ⇇ | ⇈ |

| ம் | ம | மி | மு | ய | ர | ரு | வ | வி | வு | ற | ன் | ன |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ⇉ | ⇊ | ⇋ | ⇌ | ⇍ | ⇎ | ⇏ | ⇐ | ⇑ | ⇒ | ⇓ | ⇔ | ⇖ |